# பொதுமக்கள் சேவைகள் பட்டயம்

# பச்சிலைப்பள்ளி பிரதேச சபை

தொலைநோக்கு :- எமது பிரதேசத்தை அழகாகவும் சுத்தமாகவும் பேணுவதுடன் மக்களுக்கு நவீன தொழில்நுட்பத்துடன் நிலைத்து நிற்கக்கூடிய வினைத்திறனான சேவையை வழங்குதல்

பணிக்கூற்று:- பிரதேச மக்களின் உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கி அவற்றை பராமரித்தலும் திட்டமிடப்பட்ட அபிவிருத்தியுடன் கூடிய சிறந்த பிரதேசத்தை உருவாக்குதலும்

| இல | சேவைகள் | செயன்முறை | சமர்ப்பிக்கவேண்டிய ஆவணங்கள் | பொறுப்பான உத்தியோகத்தர்கள் | கால எல்லை | கட்டணம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | கட்டட திட்டமிடல் வரைபடங்களை அனுமதித்தல். | 1) முன்அலுவலகத்தில் அல்லது இணையத்தளத்தில் கட்டட விண்ணப்பப் படிவத்தை பெற்று, பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்தை தேவையான உதவி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல்<br>2) பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பம் சரிபார்க்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படுவதுடன் வருமானப்பரிசோதகர் | 1. கட்டட வரைபடம்- மூலப் பிரதிகள் -3<br>2. நடப்பு ஆண்டிற்கான மதிப்பீட்டு வரி செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு - பிரதி 1.<br>3. நில உரிமையாளரின் தேசிய அடையாள அட்டை - நிழற்படப் பிரதி 1 | முன் அலுவலக உத்தியோகத்தர்<br>☎ 0243243544<br>தொழில்நுட்ப உத்தியோகத்தர் | 21 நாட்கள் | விண்ணப்பப் படிவக் கட்டணம் ரூ.250 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களிடமிருந்து கள ஆய்வு அறிக்கைகள் பெறப்படுதல், தேவை ஏற்படின் தொடர்புபட்ட திணைக்கள அனுமதியினை பெற்றுக்கொள்ளல்<br>3) தவிசாளர் அல்லது செயலாளரின் அனுமதிக்கு சமர்ப்பித்தல் அல்லது மேற்கொள்ளப்படவேண்டிய திருத்தங்கள் தொடர்பாக விண்ணப்பதாரிக்கு அறிவித்தல்.<br>4) கட்டட அனுமதிப்பத்திரத்தினை வழங்குதல் | 4. 30 ஆண்டுகளுக்கான வரலாற்றுத் தாள்கள்- நிழற்படப் பிரதிகள் 1, மூலப் பிரதி சரிபார்ப்புக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்<br>5. நில அளவைப்படம் - நிழற்படப் பிரதி 3, ஆனால் மூலப் பிரதி ஆரம்ப சரிபார்ப்புக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்<br>6. சட்ட ரீதியான காணி ஆவணம் (உறுதிப்படுத்தப்பட்டது) நிழற்படப் பிரதிகள் 3, மூலப் பிரதி சரிபார்ப்புக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.<br>7. உபபிரிவிடல் - பிரதி 1 (தேவை ஏற்படின்).<br>8. காணி 6 பேர்ச்களுக்கு குறைவாக இருந்தால் நகர அபிவிருத்தி அதிகாரசபை அனுமதி பெற வேண்டும் நிழற்படப் பிரதிகள் 3<br>9. நிலம் அரசுக்கு சொந்தமானதாக இருந்தால், பிரதேச செயலகத்திலிருந்து குத்தகை ஒப்பந்தம் பெறப்பட வேண்டும்.<br>10. தனியார் அல்லாத நிலத்தில் கட்டட அனுமதி வழங்கப்பட வேண்டுமானால், பிரதேசசெயலக அனுமதி தேவை<br><br>(விடயத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தரிடமிருந்து விண்ணப்பப் படிவத்துடன் சமர்ப்பிக்கவேண்டிய ஆவணங்களின் பட்டியலை பெற்றுக்கொள்ளவும்) | ☎ 0243243544<br><br>விடயத்துக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்<br><br>☎ 0243243544 | | செயன்முறைக் கட்டணம் ரூ. அளவுகளுக் கேற்ப வர்த்தமானப் படுத்தப்பட்ட தொகை |
| 02 | காணி உப பிரிப்பு மற்றும் ஒருங்கிணைப்புச் செய்யும் | 1. விண்ணப்பதாரி முன்அலுவலகத்தில் அல்லது இணையத்தளத்தில் விண்ணப்பப் படிவத்தை பெற்று, சரியாகப் பூர்த்தி செய்து தகைமைபெற்ற நபரால் உறுதிப்படுத்தி உள்ளூராட்சி | 1. சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம்<br>2. நடப்பாண்டு ஆதன வரி செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதி | முன் அலுவலக உத்தியோகத்தர் | 21 நாட்கள் | விண்ணப்பப் படிவக் கட்டணம் ரூ………. |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | அபிவிருத்தி திட்டங்களை அனுமதித்தல். | மன்றத்திடம் சமர்ப்பிக்கும் போது, முன்கூட்டிய கட்டணத்தை செலுத்துதல், பற்றுச்சீட்டை பெற்றுக்கொள்ளுதல்<br>2. வெளிக்களப் பரிசோதனைக்கு வரும் திகதியை விடய உத்தியோகத்தரிடமிருந்து விண்ணப்பதாரி அறிந்துகொள்ளுதல்.<br>3. விடய உத்தியோகத்தர் விண்ணப்பத்தை தொழில்நுட்ப உத்தியோகத்தருக்கு அனுப்பி வெளிக்கள பரிசோதனையை தொழில்நுட்ப உத்தயோகத்தரின் அவதானிப்புக்கள் மற்றும் விதப்புரைகள் அடங்கிய கோவையை பெற்று தவிசாளர், செயலாளருக்கு சமர்ப்பித்தல்.<br>4. மேற்கொள்ளப்படவேண்டிய திருத்தங்கள் தொடர்பாக விண்ணப்பதாரிக்கு அறிவிக்கப்படுதல்.<br>5. உபபிரிவிடல் அல்லது ஒன்றிணைத்தலுக்கான அனுமதி வழங்குதல் | 3. உபபிரிவிடுகை மேற்கொள்ளப்படவுள்ள காணிக்கான உரித்து ஆவணம் மூலப்பிரதியும் நிழற்பட பிரதியும் (காணி உறுதி, அனுமதி பத்திரம் போன்றன)<br>4. ஒரு மாத காலத்தினுள் காணிப் பதிவகத்திலிருந்து இறுதியாக மாற்றம் செய்யப்பட்ட உறுதிக்குரிய தோம்பும் உறுதியின் பிரதியும்.<br>5. உப பிரிவிடுகை மேற்கொள்ளப்படவுள்ள காணியின் நில அளவைப் படம்<br>6. பிரேரிக்கப்படவுள்ள துண்டாடப்படும் ∴ பிரிவிடப்படும் காணி துண்டுகளினை காட்டும் நில அளவைப்படம்<br>7. ஏற்கனவே குறித்த காணி அல்லது காணியின் ஒரு பகுதி உப பிரிவிடல் அல்லது ஒருங்கிணைப்பு செய்யப்பட்டிருப்பின் உள்ளூராட்சி மன்றத்தினால் வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரமும் அதன் பிரதியும்<br>8. ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்தும் ஆவணத்தின் பிரதி<br>9. குறித்த காணியின் உப பிரிவிடுகையினால் தற்போதுள்ள கட்டடம் ஒன்று பிரிவடையும் சந்தர்ப்பத்தில் கட்டத்தின் அனுமதிக்கப்பட்ட வரைபடத்தின் பிரதி.<br>10. காணி அமைந்துள்ள இடத்திற்கு இலகுவில் பிரவேசிக்க கூடியதாக அமைந்த இட அமைவு வரைபடம் | ☎0243243544 .<br>தொழில்நுட்ப உத்தியோகத்தர்<br>☎0243243544<br>விடயத்துக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்<br>☎ 0243243544 | | கட்டணம் ரூ. . . . . . . . . |
| 03 | அபிவிருத்தி அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடியான | 1. சபையின் இணையத்தளம் அல்லது முன்னலுவலகத்தில் காலநீடிப்பிற்கான விண்ணப்ப படிவம் பெற்றுக் கொள்ளல்<br>2. இணைப்புகளுடனான பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தை பொறுப்பேற்று செயலாக்க | 1. சரியாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம்<br>2. அனுமதிக்கப்பட்ட அபிவிருத்தி திட்டத்தின் மூலப் பிரதி | முன் அலுவலக உத்தியோகத்தர்<br>☎ 0243243544 | 7 நாட்கள் | வர்த்தகக்கட்டடம் - 1500<br>வதிவிடம் - 1000 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | காலத்தை நீடித்தல். | கட்டணம் அறவிடல், பற்றுச்சீட்டு மற்றும் தொடர் நடவடிக்கை இலக்கம் வழங்குதல்<br>3. வேண்டுகோளுக்கு ஏற்புடையதான ஆரம்பக் கோவை மற்றும் வேண்டுகோளைத் தொழில்நுட்ப அலுவலரிடம் ஒப்படைத்தல்<br>4. தொழில்நுட்ப அலுவலரின் அவதானிப்புக்கள் மற்றும் பரிந்துரைகள் உள்ளடங்கலான கள அறிக்கையை பெற்றுக்கொள்ளல்<br>5. பூரணப்படுத்தப்பட்ட கோவையை தவிசாளர் செயலாளருக்கு சமர்ப்பித்தல்<br>6. தீர்மானத்தை விண்ணப்பதாரிக்கு எழுத்து மூலத்தில் அறிவித்தல் | 3. வழங்கப்பட்ட அபிவிருத்தி அனுமதிப்பத்திரத்தின் பிரதி<br>4. விண்ணப்பதாரியின் தேசிய அடையாள அட்டையின் இரண்டு பக்கங்களையும் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி<br>5. விண்ணப்பதாரி காணியின் உரிமையாளர் அல்லாத சந்தர்ப்பத்தில் காணி உரிமையாளரது சம்மதத்தை தெரிவிக்கும் கடிதம். | தொழில்நுட்ப உத்தியோகத்தர்<br>☎0243243544<br>விடயத்துக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்<br><br>☎ 0243243544. | | |
| 04 | அடாத்தான நிர்மாணங்களுக்கு உள்ளடக்கிய ஒப்புதல் வழங்குதல். | 1. விண்ணப்பப்படிவம் பெற்றுக்கொள்ளுதல் (முன்னலுவலகம் அல்லது சபையின் இணையத்தளம்)<br>2. தகைமைகளைப் பெறுகின்ற நபரால் சான்றுப்படுத்தி சரியாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் பொறுப்பேற்றல், செயற்பாட்டுக் கட்டணம் அறவிடல், பற்றுச்சீட்டு வழங்குதல், தொடர் நடவடிக்கை இலக்கம், மற்றும் களப் பரிசோதனைக்கு வருகை தருகின்ற திகதி விண்ணப்பத்தாரியிடம் அறிவித்தல்<br>3. வேண்டுகோளை விடய பொறுப்பு அலுவலர் மூலம் தொழில்நுட்ப அலுவலரிடம் சமர்ப்பித்தல். களப் பரிசோதனைக்கு செல்கின்ற திகதியை உறுதிப்படுத்தும் அறிவிப்பை விண்ணப்பதாரியிடம் அறிவித்தல்<br>4. வேண்டுகோள் தொடர்பாக தமது அவதானிப்புகளும் பரிந்துரைகளுடனும் கோவையை தவிசாளர் செயலாளருக்கு சமர்ப்பிப்பதற்காக விடய பொறுப்பு அலுவலரிடம் சமர்ப்பித்தல்<br>5. தொழில்நுட்ப அலுவலரின் பரிந்துரைகளுடன் வேண்டுகோளைக் கவனத்தில்கொண்டு தழுவு அங்கீகாரம் வழங்குதல் | 1. சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம்<br>2. விண்ணப்பதாரியின் தேசிய அடையாள அட்டையின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி<br>3. தகைமைபெற்ற ஒரு நபரால் சான்றுப்படுத்தப்பட்ட கட்டட திட்டமிடல் வரைபடத்தின் பிரதிகள் 03. (விண்ணப்பத்தின் இயல்பின் அடிப்படையில் உரிய தகைமைபெற்ற நபர் யார் என்பதை சபையின் இணையத்தளத்தில் அல்லது முன் அலுவலகத்தில் அறிந்து கொள்ள முடியும்.)<br>4. கட்டடம் நிர்மாணிக்கப்பட்ட காணியில் அனுமதிக்கப்பட்ட அளவை திட்டத்தின் பிரதியை நகர அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்ட நகர அபிவிருத்தி பிரதேசங்களுக்கு மட்டும் பொருத்தமானதாக அமையும்.<br>5. கட்டடத்தின் நிர்மாணத்தின் இயல்பின் அடிப்படையில் விண்ணப்பத்தில் | முன் அலுவலக உத்தியோகத்தர்<br>☎ 0243243544<br><br>தொழில்நுட்ப உத்தியோகத்தர்<br>☎ 0243243544<br><br>விடயத்துக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்<br><br>☎ 0243243544 | 28 நாட்கள் | விண்ணப்பப் படிவக் கட்டணம் ரூ250<br><br>கட்டப்பட்டுள்ள அளவுகளுக்கேற்ப வர்த்தமானப் படுத்தப்பட்ட கட்டணங்கள் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 6. தழுவு அங்கீகாரம் பொருட்டு செலுத்தப்பட வேண்டிய தாமதக் கட்டணம் மற்றும் அதனைச் செலுத்துமாறு விண்ணப்பத்தாரியிடம் அறிவித்தல்<br>7. தாமதக் கட்டணம் செலுத்தல்<br>8. தாமதக் கட்டணம் அறவிடப்படுதல் மற்றும் பற்றுச்சீட்டு வழங்குதல் தொடர்பாக விடயபொறுப்பு அலுவலவரை அறிவுறுத்தல்<br>9. தழுவு அங்கீகாரம் வழங்கியதாக பதிவேட்டில் உறுதிப்படுத்தி, அதிகாரம்பெற்ற அலுவலரது ஒப்பம் பெற்றுக்கொள்ளுதல்.<br>10. ஒப்பமிடப்பட்ட சான்றிதழை முன்னலுவலகத்திடம் சமர்ப்பித்து, ஆவணங்களை எடுத்துச் செல்லுமாறு விண்ணப்பத்தாரியை அறிவுறுத்தல்<br>11. தழுவு அங்கிகாரம் வழங்கியதை உறுதிப்படுத்துகின்ற ஆவணங்களை விண்ணப்பத்தாரியிடம் ஒப்படைத்து ஒப்பங்களை பெற்றுக்கொள்ளுதல் | குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களில் வழங்கப்படுகின்ற சான்றிதழ்கள்.<br>6. விண்ணப்பதாரி காணியின் உரிமையாளர் அல்லாத சந்தர்ப்பத்தில் காணி உரிமையாளது சம்மதத்தை வெளிப்படுத்தும் கடிதம்<br>7. நொத்தாரிசினால் சான்றுப்படுத்தப்பட்ட காணி உறுதியின் பிரதியொன்று | | | |
| 05 | குடிபுகு அல்லது இயைபுச் சான்றிதழ் வழங்குதல். | 1. விண்ணப்பப் படிவம் பெற்றுக்கொள்ளுதல் (முன்னலுவலகம் அல்லது சபையின் இணையத்தளம்)<br>2. தகைமைகளைப் பெற்றுள்ள நபர்களால் சான்றுப்படுத்திய, செவ்வையாக பூர்த்தி செய்த விண்ணப்பங்களை பொறுப்பேற்று விண்ணப்பம் கையேற்றமைக்கான சான்றிதழினை விண்ணப்பதாரிக்கு வழங்குதல்.<br>3. செயலாக்க கட்டணங்களை அறவிடல், பற்றுச்சீட்டுகளை வழங்குதல், மற்றும் விடய உத்தியோகத்தர், தொழில்நுட்ப உத்தியோகத்தரின் தொடர்பிலக்கங்களினை விண்ணப்பதாரிக்கு வழங்குதல்.<br>4. வேண்டுகோளை விடய பொறுப்பு அலுவலர் மூலம் தொழில்நுட்ப அலுவலரிடம் சமர்ப்பித்தல்<br>5. களப் பரிசோதனைக்கு வருகின்ற திகதியை உறுதிப்படுத்தும் அறிவிப்பு தொலைபேசி குறுஞ்செய்தி மூலம் விண்ணப்பதாரிக்கு | | முன் அலுவலக உத்தியோகத்தர்<br>☎ 0243243544<br><br>தொழில்நுட்ப உத்தியோகத்தர்<br>☎ 0243243544<br><br>விடயத்துக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்<br><br>☎ 0243243544 | 14 நாட்கள் | வர்த்தகக்கட்டடம்-1500<br>வதிவிடம்-1000 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | தொழில்நுட்ப உத்தியோகத்தரினால் அனுப்பி வைக்கப்படுதல்<br>6. களப் பரிசோதனை<br>7. விண்ணப்பம் தொடர்பில் தமது அவதானிப்புகளும் பரிந்துரைகளுடனும் கூடிய கோவை செயலாளர், தவிசாளருக்கு சமர்ப்பிப்பதற்காக விடயபொறுப்பு அலுவலரிடம் சமர்ப்பிக்கப்படுதல்<br>8. தொழில்நுட்ப அலுவலரின் பரிந்துரைகளுடன் வேண்டுகோளைக் கவனத்தில்கொண்டு அங்கீகரிக்கப்படுதல்<br>9. இசைவுச் சான்றிதழ் தயாரித்து அதிகாரம் பெற்ற அலுவலரின் கையொப்பம் பெற்றுக்கொள்ளுதல்.<br>10. கையொப்பமிடப்பட்ட சான்றிதழினை விடய அலுவலரினால் உரிய நபருக்கு சேர்ப்பித்தல் | | | | |
| 06. | வீதி ரேகை ∴ கட்டிட வரையறை சான்றிதழ் வழங்குதல். | 1. முன்னலுவலகத்தில் அல்லது சபையின் இணையதளத்தில் விண்ணப்பம் பெற்றுக்கொள்ளுதல்<br>2. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம் மற்றும் காணியின் நிலஅளவைத் திட்டத்தின் பிரதி பொறுப்பேற்றல்<br>3. நிலஅளவையாளர் திட்டத்தின் உதவியுடன் மற்றும் விண்ணப்பதாரியை உசாவுவதன்மூலம் காணிக்கு எல்லையாக உள்ள வீதிகளை அடையாளம் காணுதல் ∴ அடையாளம் காணமுடியாதவிடத்து தொழில்நுட்ப அலுவலரின் உதவியை பெற்றுக்கொள்ளுதல்<br>4. சம்பந்தப்பட்ட ஆதனங்கள் தொடர்பில் சபைக்கு அறவிடப்பட வேண்டிய ஏதேனும் பணத்தொகை உள்ளதா என்பதை பரீட்சித்துப் பார்த்து (பணத்தொகை இருப்பின்) அதனுடன் சான்றிதழ் வழங்கும் கட்டணத்தின் அளவை அறவிட்டு பற்றுச்சீட்டு வழங்குதல்.<br>5. தெருவெல்லை ∴ கட்டட எல்லை சான்றிதழ் வழங்குதல் | 1. வரலாற்றுத்தாள் (30 வருடங்களுக்கானது)<br>2. காணி உறுதி<br>3. நிலஅளவை வரைபடம் (10 வருடங்களுக்குட்பட்டது)<br>4. அற்றோனித்தத்துவம் (தேவையேற்படின்)<br>5. திருமணச்சான்றிதழ் (தேவையேற்படின்) | முன் அலுவலக உத்தியோகத்தர்<br>☎ 0243243544<br><br>விடயத்துக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்<br><br>☎ 0243243544 | 3 நாட்கள் | கட்டணம் ரூ.500 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 07. | உரிமை மாற்றச் சான்றிதழ் வழங்குதல். | 01. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்ப படிவத்தை சரிபார்த்து ஏற்றுக்கொள்ளல்<br>02. வருமானப்பரிசோதகரின் களவிஜய அறிக்கையை பெற்றுக்கொள்ளுதல்<br>03. களவிஜய அறிக்கையின் அடிப்படையில் உரிமை மாற்றத்திற்கான சான்றிதழை அங்கீகரித்து வழங்குதல்<br>04. ஆதனப் பதிவேட்டில் மாற்றங்கள் மற்றும் உரிமை மாற்றங்களை மேற்கொள்ளுதல்<br>05. மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் தொடர்பாக விலைமதிப்பீட்டு திணைக்களத்திற்கு அறிவித்தல் | 01. விண்ணப்பதாரியின் கோரிக்கைக்கடிதம் சமர்ப்பிக்க வேண்டும்.<br>02. பெயர்மாற்ற விண்ணப்பம் பிரசித்த நொத்தாரிசினால் பூரணப்படுத்தப்பட்டு ஒப்பந்தத்துடன் திகதி, பதவி, இலச்சினை பொறிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.<br>03. ஆதனத்தின் உறுதிகள்<br>04. விண்ணப்பதாரியின் உறுதியில் பெயர்கள் வேறுபாடு இருந்தால் சத்தியக்கடதாசியின் மூலப்பிரதியும் நிழற்பிரதியும்.<br>05. சொரியல்காணியாக இருப்பின் பிரிவிடுதல் உறுதி மூலம் அல்லது நீதிமன்ற அனுமதியுடனான உறுதி சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.<br>06. குறித்த ஆவணத்திற்கான நிலஅளவைப்பட பிரதி சமர்ப்பிக்கப்படல் வேண்டும் (நில அளவைப்படத்தில் நில அளவையாளர் பெயர், பெயர், ஒப்பம், காணியின் அளவு, பாதை, இலக்கம், திகதி என்பன குறிப்பிடப்படுதல் வேண்டும்.<br>07. 1986ற்கு பின்னர் காணி உபபிரிவிடுகை செய்யப்பட்டிருந்தால் திட்டமிடல் பிரிவினரால் அங்கீகரிக்கப்பட்ட நில அளவைப்படம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.<br>08. தேவையான சந்தர்ப்பத்தில் பிறப்புச்சான்றிதழும், அடையாள அட்டையின் மூலப்பிரதியும், நிழற்பிரதியும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.<br>09. உரிய சொத்தின் உரிமையானது பிரிப்பு வழக்கில் கிடைக்கப்பெற்றிருந்தால், நீதிமன்ற தீர்மானத்தின் சான்றுப்படுத்தப்பட்ட இரண்டு பிரதியை | முன் அலுவலக உத்தியோகத்தர்<br>☎ 0243243544 | 15 நிமிடங்கள் | ரூ.......... |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | உறுதி சாராம்சத்தின் பிரதிகளுடன் சமர்ப்பித்திருத்தல் வேண்டும்.<br><br>10. மாடிக் கட்டடமொன்றில் பிரித்து ஒதுக்கப்பட்ட ஒரு அலகின் பெயரை மாற்றுவதற்கு உறுதி சாராம்சத்தின் பிரதிகளை சமர்ப்பிக்கும்போது, அந்த மாடிக்கட்டடத்தின் உரிய அலகிற்குப் பதிலாக பெயரை மாற்றுவதற்கு தொகுப்பு வீடுகள் முகாமைத்துவ அதிகாரசபையினால் (ஊழுனேழுஆஜஜேருஆ ஆயுயேுபுநுஆநுவே யுருவு்ழுசுஜவுலு) அனுமதிக்கப்பட்ட தொகுப்புவீட்டு திட்டத்தின் (ஊழுனேழுஆஜஜேருஆ ீடியுே) சான்றுப்படுத்தப்பட்ட இரண்டு பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும்.<br><br>11. காணியின் சட்டரீதியான உரிமை அல்லாத பிற நபராயின் சட்டரீதியான உரிமையாளரினால் கையளிக்கப்பட்ட அட்டோர்னி அனுமதிப்பத்திரத்தின் சான்றுப்படுத்தப்பட்ட இரண்டு பிரதிகளுடன், அந்த அட்டோர்னி அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்படவில்லை எனவும் அட்டோர்னி அதிகாரத்தை வழங்கிய நபர் உயிரோடு இருப்பதாக சத்தியக் கடதாசியொன்றையும் சமர்ப்பித்தல் வேண்டும்.<br>12. ஆறுமாதத்திற்குட்பட்ட வரலாற்றுத்தாள் | | | |
| 08. | பாதையை உடைப்பதற்கு | 1. இணைக்க வேண்டிய ஆவணங்களுடன் விண்ணப்பப் படிவத்தை சமர்ப்பித்தல் | 1. விண்ணப்ப படிவங்கள் | முன் அலுவலக உத்தியோகத்தர் | 5 நாட்கள் | சேதப்படுத்தும் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | அனுமதி கோருதல். | 2. கட்டணத்தை முடிவு செய்து, வைப்பு உட்பட கட்டணத்தைப் வசூலித்தல்<br>3. வீதியை உடைப்பதற்கான அனுமதியை வழங்குதல்<br>4. கள பரிசோதனை மற்றும் வீதியின் சேதம் புனரமைக்கப்படுவதை உறுதி செய்தல்<br>5. வாடிக்கையாளருக்கு வைப்புத்தொகையை மீளளித்தல் | 2. நீர் வழங்கல் சபையின் கடிதம்<br>3. இடத்தின் வரைபடம் | ☎ 0243243544<br>தொழிநுட்ப உத்தியோகத்தர்<br>☎ 0243243544 | | அளவிற்கமைய மாறுபடும். |
| 09 | தகனச் சாலைகளை ஒதுக்குதல். | 1. விண்ணப்பப் படிவம் பூர்த்தி செய்து சமர்ப்பித்தல் வேண்டும்.<br>2. இறந்த நபரின் தேசிய அடையாள அட்டைப் பிரதி, கிராம சேவகர் (புளு.்.புே) அறிக்கை ஆகியவற்றை சமர்ப்பிக்க வேண்டும்.<br>3. தகனச் சேவைகளுக்கான கட்டணத்தை உள்ளூராட்சி சபை அறவீடு செய்யும் | 1. சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம்<br>2. விண்ணப்பதாரியின் தேசிய அடையாள அட்டையின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி | முன் அலுவலக உத்தியோகத்தர்<br>☎ 0243243544<br>விடய உத்தியோகத்தர்<br>☎ 0243243544 | 15 நிமிடங்கள் | ரூ. 1000 |
| 10 | விளையாட்டு மைதானங்களை வாடகைக்கு விடுதல். | 1. விண்ணப்பப் படிவம் பூர்த்தி செய்து சமர்ப்பித்தல் வேண்டும்.<br>2. முற்கூட்டியே கட்டணத்தை முழுமையாக அல்லது பகுதியாக செலுத்துதல்<br>3. விளையாட்டு மைதானத்திற்கு சேதங்கள் ஏதும் எற்பட்டிருந்தால் அதற்குரிய இழப்பீட்டினை உள்ளூராட்சி மன்றத்திற்கு மைதானத்தை வாடகைக்கு பெறுவோர் வழங்க வேண்டும். | சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் | முன் அலுவலக உத்தியோகத்தர்<br>☎ 0243243544<br>விடய உத்தியோகத்தர்<br>☎ 0243243544 | உடடினயாக | விளையாட்டு மைதான கடடணம் நிகழ்வுகளின் அடிப்படையில் அறவிடப்படும் |
| 10. | விழா மண்டபங்கள் ∴ நகர மண்டபங்கள் ∴ சனசமூக நிலையங்களை வாடகைக்கு விடுதல். | 1. விண்ணப்பப் படிவம் பூர்த்தி செய்து சமர்ப்பித்தல் வேண்டும்.<br>2. முற்கூட்டியே கட்டணத்தை முழுமையாக அல்லது பகுதியாக செலுத்துதல்<br>3. விளையாட்டு மைதானத்திற்கு சேதங்கள் ஏதும் எற்பட்டிருந்தால் அதற்குரிய இழப்பீட்டினை உள்ராட்சி மன்றத்திற்கு மைதானத்தை வாடகைக்கு அமர்த்துவோர் வழங்க வேண்டும். | சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் | முன் அலுவலக உத்தியோகத்தர்<br>☎ 0243243544<br>மண்டபத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்<br>☎0243243544 | உடனடியாக | மண்டப கட்டணங்கள் ரூ. 2000 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 12. | ஆதனவரி அறவிடுதல். | 1. ஆதனவரி அறிவிப்பு வெளியிடப்படுதல்<br>2. பணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டு (மூன்று பிரதி) பெறப்பட வேண்டும். படிவம் வழங்கப்படுதல். (ஒரு காலாண்டு அல்லது காலாண்டுகள் அல்லது ஒரு வருடம் காலத்திற்கானது)<br>3. வரி செலுத்துதல்<br>4. முத்திரை பொறிக்கப்பட்ட பற்றுச்சீட்டின் மூலப்பிரதி மற்றும் ∴ அல்லது காசாளரின் கையொப்பத்துடன் பணம் செலுத்தியதை ஒப்புக் கொண்டு வழங்கப்படுதல் | சபையினால் தமக்கு அனுப்பப்பட்ட ஆதனவரி அறிவித்தல். | முன் அலுவலக உத்தியோகத்தர்<br>☎ 0243243544 | 15 நிமிடங்கள் | மதிப்பீட்டு அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள தொகை |
| 13. | வியாபார வரியை அறவிடுதல். | 1. உள்ளூராட்சி மன்ற நிர்வாக எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் அனைத்து வியாபார இடங்களுக்கும் சபையின் தீர்மானத்தினை அறிவித்தலும் விண்ணப்பப் படிவத்தை இலவசமாக வழங்குதல்<br>2. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களின் சேகரித்தல்<br>3. வியாபார வரி கட்டணம் வசூலிக்கப்படுதல்<br>4. முத்திரை பொறிக்கப்பட்ட பற்றுச்சீட்டின் மூலப்பிரதி ∴ அல்லது காசாளரின் கையொப்பத்துடன் பணம் செலுத்தியதை ஒப்புக் கொண்டு வழங்குதல். | சபையினால் தமக்கு அனுப்பப்பட்ட வியாபார வரி அறிவித்தல். | முன் அலுவலக உத்தியோகத்தர்<br>☎ 0243243544<br>வருமான பரிசோதகர்<br>☎ 0243243544 | 15 நிமிடங்கள் | வரி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தொகை |
| 14. | கைத்தொழில் வரியை அறவிடுதல். | 1. உள்ளூராட்சி மன்ற நிர்வாக எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் அனைத்து இடங்களுக்கும் சபையின் தீர்மானத்தினை அறிவித்தலும் விண்ணப்பப் படிவத்தை இலவசமாக வழங்குதல்<br>2. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களின் சேகரித்தல்<br>3. கைத்தொழில் வரி கட்டணம் வசூலிக்கப்படுதல்<br>4. முத்திரை பொறிக்கப்பட்ட பற்றுச்சீட்டின் மூலப்பிரதி ∴ அல்லது காசாளரின் கையொப்பத்துடன் பணம் செலுத்தியதை ஒப்புக் கொண்டு வழங்கப்படுதல் | சபையினால் தமக்கு அனுப்பப்பட்ட கைத்தொழில் வரி அறிவித்தல். | முன் அலுவலக உத்தியோகத்தர்<br>☎ 0243243544<br>வருமான பரிசோதகர்<br>☎ 0243243544 | 15 நிமிடங்கள் | வரி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தொகை |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 15. | சுற்றுச்சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம். | 1. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்தை இணைக்க வேண்டிய ஆவணங்களுடன் சமர்ப்பித்தல்<br>2. விண்ணப்பப் படிவத்தை சரிபார்த்து பெற்றுக்கொள்ளல் மற்றும் பரிசீலனைக் கட்டணங்களை அறவீடு செய்தல்<br>3. கள பரிசீலனைக் குழு கள பரிசீலனை அறிக்கையை சமர்ப்பித்தல்<br>4. தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு உறுப்பினர்களுடன் பரிசீலனை அறிக்கையைப் பகிர்தல்<br>5. தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு (வுநுஊ) கூட்டத்தை நடத்துதல்<br>6. தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் தீர்மானம்<br>7. சுற்றுச்சூழல் பாதுகாப்பு உரிமத்தினை வழங்குதல் | 1. பூரணப்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் பாதுகாப்பு உரிம விண்ணப்பப் படிவம்<br>2. தொழில் அல்லது வணிகத்தின் இருப்பிடத்தைக் குறிக்கும் வீதியின் படம்<br>3. வியாயபார பதிவு சான்றிதழ்.<br>4. கட்டடம்.்.தளத்தின் அங்கீகரிக்கப்பட்ட வரைபடம் மற்றும் இணக்கச் சான்றிதழ்<br>5. நில அளவைப்படம்<br>6. மாசுபாட்டைக் குறைப்பதற்கான முன்மொழிவு. | முன் அலுவலக உத்தியோகத்தர் ☎ 0243243544<br>விடயத்துக்குப் பொறுப்பான உத்தியோகத்தர் ☎ 0243243544<br>தொழிநுட்பஉத்தியோகத்தர் ☎0243243544 | 14 நாட்கள் | விண்ணப்பப் பத்திரம் ரூ.50<br><br>பரிசீலனைக் கட்டணம் முதலீட்டின் அடிப்படையில் அறவிடப்படும்<br><br>அனுமதிப்பத்திரம் ரூ.. 4000.00 |
| 16. | வாகனம் மற்றும் பொறிகளை வாடகைக்கு விடுதல். | 1. விண்ணப்பப் படிவம் பூர்த்தி செய்து சமர்ப்பித்தல் வேண்டும்.<br>2. முற்கூட்டியே கட்டணத்தை முழுமையாக அல்லது பகுதியாக செலுத்துதல்<br>3. சொத்துக்களுக்கு சேதங்கள் ஏதும் எற்பட்டிருந்தால் அதற்குரிய இழப்பீட்டினை உள்ளூராட்சி மன்றத்திற்கு வாடகைக்கு அமர்த்துவோர் வழங்க வேண்டும். | சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் | முன் அலுவலக உத்தியோகத்தர் ☎0243243544<br>விடயத்துக்குப் பொறுப்பான உத்தியோகத்தர் ☎0243243544 | ஒதுக்குவதற்காக 3 நாட்கள் | வாடகை கட்டணம்<br><br>வர்த்தமானப் படுத்தப்பட்ட கட்டணங்கள் |
| 17. | மலசலக் கழிவுகளை அகற்றும் சேவைகளை வழங்குதல். | 1) விண்ணப்பப் படிவம் பூர்த்தி செய்து சமர்ப்பித்தல் வேண்டும்.<br>2) முற்கூட்டியே கட்டணத்தை முழுமையாக செலுத்துதல்<br>3) கலிபுவுசர் மூலம் மலசலக்கழிவுகள் அகற்றப்படுதல் | சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் | முன் அலுவலக உத்தியோகத்தர் ☎ 0243243544<br>கலி பவுசர் சாரதி ☎ 0213003939<br>தொழிநுட்ப உத்தியோகத்தர் ☎ 0243243544. | 1 நாள் | பவுசர் கட்டணம் ரூ.. 5500.00 எமது சபை எல்லைக்கு வெளியே போக்குவரத்து கட்டணம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 19 | | | | | | 1 கி.மீ.ரூ. 50.00 |
| 18. | நீர் பவுசர் சேவைகளை வழங்குதல். | 4) விண்ணப்பப் படிவம் பூர்த்தி செய்து சமர்ப்பித்தல் வேண்டும்.<br>5) முற்கூட்டியே கட்டணத்தை முழுமையாக செலுத்துதல்<br>6) நீர் விநியோகத்தினை பெற்றுக்கொள்ளுதல் | சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் | 1. முன் அலுவலக உத்தியோகத்தர்<br>1. ☎0243243544<br>நீர் பவுசர் சாரதி<br>☎ 0213003939<br>2. தொழிநுட்ப உத்தியோகத்தர்<br>☎ 0243243544 | 01 நாள் | லீற்றர் ஒன்றுக்கு ரூ. 2.00 |
| 19 | வியாபார அனுமதிப்பத்திரங்களை வழங்குதல். | 1) உள்ளூராட்சி மன்ற நிர்வாக எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் அனைத்து வணிக இடங்களுக்கும் சென்று விண்ணப்பப் படிவத்தை இலவசமாக வழங்குதல்<br>2) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை சேகரித்தல்<br>3) விண்ணப்பதாரர் வழங்கிய தகவலின் செல்லுபடியாகும் தன்மை சரிபார்க்கப்படுதல்<br>4) வருமானப்பரிசோதகரின் களஆய்வும் அதன் அறிக்கையும் பெற்றுக்கொள்ளுதல்<br>5) பொது சுகாதார பரிசோதகரிடம் ஒப்புதலுக்காக விண்ணப்பத்தினை அனுப்புதல்<br>6) களப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு பரிந்துரைகள் செய்து முன்வைத்தல்<br>7) வியாபார உரிம கட்டணம் வசூலிக்கப்படுதல்<br>8) வியாபார உரிமம் வழங்குதல் | 1) சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம்<br>2) சுற்றுச்சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளவேண்டிய தொழில் அல்லது வியாபாரமாக இருக்கும்பட்சத்தில் செல்லுபடியான சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்று. | முன் அலுவலக உத்தியோகத்தர்<br>☎ 0243243544<br>.பொதுச் சுகாதாரப் பரிசோதகர்<br>☎ . . . . . . . . .<br>.தொழிநுட்ப உத்தியோகத்தர்<br>☎0243243544. . | 14 நாட்கள் | இடத்தின் வருடாந்தப் பெறுமதியின் அடிப்படையில் நியமிக்கப்படும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 20. | மரங்களினால் ஏற்படுகின்ற ஆபத்தான நிலைமைகளை அகற்றுதல். | 1) விடயத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தர் ஊடாக விண்ணப்பப் படிவத்தை தொழில்நுட்ப உத்தியோகத்தருக்கு அனுப்புதல்<br>2) கள பரிசோதனைக்கு வருகைதரும் தினம் பற்றி விண்ணப்பதாரிக்கு அறிவித்தல்<br>3) கள பரிசோதனையை மேற்கொண்டு அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகள் கொண்ட அறிக்கையை செயலாளருக்கு அனுப்புதல்<br>4) தொழில்நுட்ப உத்தியோகத்தரின் பரிந்துரைகளை உறுதிப்படுத்தி அனுமதியை பெற்றுக்கொள்ளல்<br>5) கோரிக்கை தொடர்பில் அனுமதியளித்தல்<br>6) ஆபத்தான நிலைமையை அகற்றுதல் தொடர்பில் மர உரிமையாளருக்கு அறிவித்தல். (வெட்டி அகற்ற தடை செய்யப்பட்ட மரமெனின் பிரதேச செயலாளாலா் ஊடாக) | சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் | முன் அலுவலக உத்தியோகத்தர்<br>☎ 0243243544<br>1. தொழிநுட்ப உத்தியோகத்தர்<br>☎0243243544 | 3 நாட்கள் | கட்டணமில்லை |
| 21. | கேளிக்கை வரியை அறவிடுதல் மற்றும் கேளிக்கை வரியிலிருந்து விலக்களித்தல். | 1) அனைத்து டிக்கெட்டுகளிலும் உள்ளூராட்சி சபையின் உரிய உத்தியோகத்தரின் முத்திரை பொறித்தல்<br>2) சீல் செய்யப்பட்ட டிக்கெட்டுகளின் எண்ணிக்கைக்கு இணையான தொகையை உள்ளூராட்சி சபையில் உத்தரவாதமாக வைப்பு செய்ய வேண்டும்.<br>3) பொது நிகழ்ச்சிக்கு பொறுப்பான நபர் விற்கப்பட்ட டிக்கெட்டுகளின் எண்ணிக்கையை கண்காணித்தல்<br>4) ஒவ்வொரு காட்சிக்கும் விற்கப்பட்ட டிக்கெட்டுகளின் எண்ணிக்கையை பரிசீலனை செய்தல்<br>பொது அரங்காற்றல் உரிமத்தின் பொறுப்பாளர் தீர்க்கப்படாத டிக்கெட்டுகளின் தொகையைத் திரும்பப் பெறுதல் | கோரிக்கை கடிதம்<br>விண்ணப்படிவம் | முன் அலுவலக உத்தியோகத்தர்<br>☎ 0243243544.<br>வருமான பரிசோதகர்<br>☎ 0243243544 | 02 நாட்கள் | பிரவேசப் பத்திரங்களின் முகப்பு பெறுமதியில் (1 %) சதவீதம் |
| | | | | | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 22. | ஒருசில காணிகளை விற்பனை செய்வதன் மீதான வரி | 1) நிலங்களை ஏலத்தில் விற்பது தொடர்பான தரகு நடவடிக்கைகள் பற்றிய விவரங்களை சேகரித்தல்<br>2) அத்தகைய விவரங்களைப் பகுப்பாய்வு செய்து, நிலத்தின் விற்பனைக்கு வரி விதிக்கப்படும் என குறித்த செயல்பாட்டில் ஈடுபட்டுள்ளவர்களுக்குத் தெரிவித்தல்<br>3) வரிகளை சேகரித்து பற்றுச்சீட்டுக்களை வழங்குதல் | சபையினால் தமக்கு அனுப்பப்பட்ட ஏதேனும் காணியை விற்பனை செய்வதன் அடிப்படையில் வரி அறிவித்தல். | வருமான பரிசோதகர்<br>☎ 0243243544<br>விடயத்துக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்<br>☎ 0243243544<br>முன் அலுவலக உத்தியோகத்தர்<br>☎ 0243243544 | 15 நிமிடங்கள் | விற்பனை பெறுமதியில் 1 சதவீதம் 1 (1%) |
| 23. | பிரசித்தமான நாடக நிகழ்ச்சிகள் மற்றும் கண்காட்சிகளுக்கான அனுமதிப்பத்திரத்தை வழங்குதல். | 1) விண்ணப்ப படிவத்தை பூரணப்படுத்தி சமர்ப்பித்தல்<br>2) பொது நிகழ்ச்சிகள் நடாத்த ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் அடிப்படை வசதிகள் கழிப்பறை, நீர், மற்றும் கட்டுமானத்தின் பாதுகாப்பு என்பன குறித்து கள பரிசோதனைக்கு அனுப்புதல்<br>3) களப்பரிசீலனையின் அடிப்படையில் உரிமம் வழங்கலாமா என்பதை தீர்மானித்து உரிமம் வழங்குவது குறித்து முடிவு எடுக்கப்பட்டால் கேளிக்கை வரியையும் செலுத்துதல்<br>4) உரிமம் வழங்குதல் | சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம்<br><br>2.யு 4 அளவிலான தாளில் வரையப்பட்ட, கண்காட்சியின் செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்படுகின்ற அனைத்து அங்கத்தினையும் காட்டும் கண்காட்சி நடைபெறும் இடத்தின் அண்ணளவான வரைபடம். | முன் அலுவலக உத்தியோகத்தர்<br>☎0243243544.<br>விடயத்துக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்<br>☎ 0213003939<br>தொழிநுட்ப உத்தியோகத்தர்<br>☎ 0243243544<br>பொதுச் சுகாதாரப் பரிசோதகர்<br>☎ ............... | 2 நாட்கள் | விண்ணப்பப் பத்திர கட்டணம் ரூ. ........<br><br>முற்பணக் கட்டணம் ரூ. ........ |